IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS
SC.NO. 167/2023

Deposition of Witness for P.W.4

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.குமரன் |
| FATHER NAME | - | திரு.சண்முகம் |
| VILLAGE | - | கே.வி.வேப்பனேரி, காட்பாடி |
| TALUK | - | வேலூர் |
| OCCUPATION | - | ஆட்டோ டிரைவர் |
| AGE | - | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.08.2025.

எதிரிகள் 2 முதல் 6 ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை மனு ஏற்பு.

<u>முதல் விசாரணை –</u>

நான் தற்போது வேப்பனேரி காட்பாடி குப்பத்தில் குடியிருக்கிறேன். ஜெயராமன் மகன் கணேசனை எனக்கு யார் என்று தெரியாது. நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள 5வது எதிரி பொன்முடியை எனக்கு தெரியும். எதிரி பொன்முடி எனது மாமனார் வீட்டருகே மளிகை கடை வைத்துள்ளார். எனக்கு இவ்வழக்கை பற்றி ஒன்றும் தெரியாது. மற்ற எதிரிகளை எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் ஆஜராகத எதிரி யுவராஜ்ஜை எனக்கு தெரியாது. இறந்து போன செல்வராஜ் எனது மச்சான். என்னிடம் காண்பிக்கப்படும் மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. நான் எப்பொழுதும் ஆங்கிலத்தில் தான் கையொப்பம் செய்வேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை .

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.)

குறுக்கு விசாரணை– அரசு தரப்பு

20.04.2019 அன்று அதிகாலை 1.15 மணிக்கு போலீசார் சம்பவ இடத்தில் என் முன்னிலையிலும், கணேசன் முன்னிலையிலும் இரத்தம் தோய்ந்த மண் , இரத்தம் தோயாத மண் சம்பவ இடத்தில் இருந்து இரத்தக் கறையை பஞ்சில் துடைத்து சேகரித்ததை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றால் சரியல்ல. 21.04.2019 அன்று போலீசார் சம்பவ இடத்தை என் முன்னிலையிலும், கணேசன் முன்னிலையிலும் அதிகாலை 3.30 மணிக்கு பார்வையிட்டு பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், கணேசனும் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. போலீசார் என் முன்னிலையில் வழக்கு சொத்தை கைப்பற்றினார்கள் என்றும், சம்பவ இடத்தை பார்வையிட்டார்கள் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டார்கள், தற்போது எதிரிகளுக்கு பயந்து கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை – எதிரி தரப்பு – இல்லை

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 06.08.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

6.8.25

**Additional District Judge(FTC)**
**Vellore.**